09.11.2023

கூடுதல் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.

அமர்வு வழக்கு எண்.24/2016

அ.சா.15

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஜெகதீசன் | | |
| த/பெ | ஜெயராமன் | மதம் | |
| கிராமம் | அரியலூர் திருக்கை | தொழில் | |
| தாலுக்கா | விழுப்புரம் | வயது | 52/2023 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

முதல் விசாரணை

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் காய்கறி வியாபாரம் செய்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்துபோன சரவணனை எனக்கு தெரியாது. ஆஜர் எதிரிகள் இருவரையும் எனக்கு தெரியாது. குறிப்பாக எதிரி அன்பழகனை பார்த்தது இல்லை. இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு வேறு எதுவும் தெரியாது. என்னிடம் காட்டப்படும் எதிரி அன்பழகனின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1ம் கையெழுத்து என்னுடையது தான். அந்த கையெழுத்தை சுமார் 11 வருடங்களுக்கு ஒரு நாள் நான் வீட்டில் இருக்கும்போது ஒரு வழக்கு சம்மந்தமாக விசாரிக்க வந்த போலீசார் எழுதாத வெள்ளை தாளில் கையொப்பம் பெற்று சென்றார்கள். அந்த கையெழுத்து அ.சா.ஆ.9 ஆகும். போலீசார் இது சம்மந்தாக என்னை விசாரிக்கவில்லை.

(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுககு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது.)

அரசு தரப்பு குறுக்கு விசாரணை

கடந்த 28.7.2011ந் தேதி மதியம் சுமார் 12.15மணியளவில் வீரமூர் அய்யனார்கோவில் அருகில் நானும் முருகேசன் மகன் காத்தவராயன் இருந்தபோது கெடார் போலீசார் ஒரு வழக்கு சம்மந்தமாக எதிரி ஒருவரை விசாரிக்க போவதாகவும், நாங்கள் இருவரும் அதில்

சாட்சியாக இருக்க வேண்டும் என கேட்டுக்கொண்டதின்பேரில் சென்னை மதுரவாயலை சேர்ந்த பலராமன் மகன் அன்பு என்ற அன்பழகனை போலீசார் விசாரித்தார்கள் என்றும், அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை போலீசார் பதிவு செய்தார்கள் என்றும், அதில் சரவணன் என்பவரை கொலை செய்ய மற்ற எதிரிகளுக்கு துணையாக இருந்தும், கொலை செய்தது சம்மந்தமாக அவர் கூறியதை செஞ்சி ஆய்வாளர் அவர்கள் (கெடார் காவல்நிலைய பொறுப்பு) பதிவு செய்தார்கள் என்றும், அதில் நானும் காத்தவராயனும் கையொப்பம் செய்தோம் என்றும், தற்போது எதிரிகள் கேட்டுக்கொண்டதின்பேரில் காப்பாற்றும் நோக்கத்தில் உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை-**இல்லை